भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सूक्रवार, 26 ऐपरल 1996 / 1918 शक

New Delhi, Friday, 26th April 1996

*புது தில்லி, 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26ஆம் தேதி, வெள்ளிக்கிழமை*


## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 26th April 1996

## *சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 26, ஏப்ரல் 1996*

The translation in Tamil of the Destruction of Records Act, 1917 (5 of 1917), The Haj Committee Act, 1959 (51 of 1959), The National Highways Act, 1956 (48 of 1956), The Armed Forces (Emergency Duties) Act, 1947 (15 of 1947), The Copy Rights Act, 1957 (14 of 1957), The Muslim Women (Protection of Rights of Divorce) Act, 1986 (25 of 1986), The Bankers' Books Evidence Act, 1891 (18 of 1891), The Antiquities and Art Treasures Act, 1972 (52 of 1972), The Bonded Labour System (Abolition) Act, 1976 (19 of 1976), The Interest Act, 1978 (14 of 1978), The Disputed Elections (Prime Minister and Speaker) Act, 1977 (16 of 1977) are hereby Published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

பதிவணங்களை அழித்தல் சட்டம், 1917 (5/1917), ஹஜ்குழுச் சட்டம், 1959 (51/1959), தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், 1956 (48/1956), ஆயுதப்படையினர் (நெருக்கடி நிலைக்கடமைகள்) சட்டம், 1947 (15/1947), பதிப்புரிமைச் சட்டம், 1957 (14/1957), முஸ்லிம் பெண்கள் (மணமுறிவு மீதான உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 1986 (25/1986), வங்கியர் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டம், 1891 (18/1891), தொல்பொருள்கள் மற்றும் கலைக்கருவூலங்கள் சட்டம், 1972 (52/1972), கொத்தடிமை வேலைமுறை (ஒழிப்புச்) சட்டம், 1976 (19/1976), வட்டிச் சட்டம், 1978 (14/1978), மறுத்து வாதிடப்படும் (தலைமை அமைச்சர் மற்றும் பேரவைத்தலைவர்) தேர்தல்கள் சட்டம், 1977 (16/1977) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு(அ)வின்படி இவையே தமிழில் அதிகார உறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.


**PRICE: Rs. 60.00**

# தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், 1956

(சட்ட எண் 48/1956)[1]

[1956, செப்டம்பர் 11]

குறித்த சில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக விளம்புகை செய்வதற்காகவும், அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்காகவும் வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஏழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

*குறுந்தலைப்பு அளாவுகைமற்றும் தொடக்கம்.*

1. (1) இந்தச் சட்டம், தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், 1956 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, குறித்திடலாகும் [2] தேதியன்று செல்லாற்றல் பெறும்.

*குறித்தசில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக விளம்புகை செய்தல்.*

2. (1) இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலைகளில் ஒவ்வொன்றும், நகராட்சிப் பகுதி எதிலும் அமைந்திருக்கின்ற அதன் பகுதிகள் தவிர, தேசிய நெடுஞ்சாலைகளாக ஈங்கிதனால் விளம்புகை செய்யப்படுகிறது.

(2) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, பிற நெடுஞ்சாலை எதனையும் தேசிய நெடுஞ்சாலையாக விளம்புகை செய்யலாம்; மற்றும் அத்தகைய அறிவிக்கையின் வெளியீட்டின்பேரில், அத்தகைய நெடுஞ்சாலை இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) மைய அரசாங்கம், அதேபோன்ற அறிவிக்கை வாயிலாக நெடுஞ்சாலை எதனையும் இணைப்புப்பட்டியலிருந்து விட்டுவிடலாம்; மற்றும் அத்தகைய அறிவிக்கையின் வெளியீட்டின்பேரில் அவ்வாறு விட்டுவிடப்பட்ட நெடுஞ்சாலை ஒரு தேசிய நெடுஞ்சாலையாக இருப்பதினின்றும் அற்றுப்போகும்.

*பொருள் வரையறை.*

3. இந்தச் சட்டத்தில் ''நகராட்சிப் பகுதி'' என்பது, இருபதாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கட்தொகையுடைய எந்த நகராட்சிப் பகுதியின் கட்டாள்கைஅ ல்லது மேலாண்மை ஒரு நகராட்சிக் குழு, ஒரு நகரப்பகுதிக் குழு, ஒரு நகரக் குழு அல்லது பிற அதிகாரஅமைப்பு எதனிடமும் ஒப்படைவு செய்யப் பட்டிருக்கிறதோ, அந்த நகராட்சிப் பகுதி எதுவும் என்று பொருள்படும்.

---

1. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவரவுரைக்காக, 7—8—1956 இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 2, பக்கம் 661ஐப் பார்க்கவும்.

இந்தச் சட்டம் இப்போது—

(1) கோவா, தமண் மற்றும் டையூவிற்கு 12/1962 ஒழுங்குறுத்தும் விதியால் (1—2—1965),

(2) தாத்ரா மற்றும் நாகர்ஹவேலிக்கு 6/1963 ஒழுங்குறுத்தும் விதியால்,

(3) பாண்டிச்சேரிக்கு 7/1963 ஒழுங்குறுத்தும் விதியால் (1—10—1963),

(4) சிக்கிமுக்கு [1975ஆம் ஆண்டின் 208(2)எஸ்.ஒ. ஆல் (S.O.) பார்க்க]. நீட்டிக்கப்பட்டது.

2. சட்டம் 15—4—1957 அன்று செல்லாற்றல் பெற்றது. 1957 இந்திய அரசிதழின் பகுதி II, பிரிவு 3, பக்கம் 730ல் உள்ள 1180 (ச)/4/4/1957 தேதியிட்ட எஸ்.ஆர்.ஒ. (S.R.O.)வைப் பார்க்கவும்.

சட்டம் சிக்கிமில் நீட்டிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

10—5—1975 இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 3 (II), பக்கம் 1213 மற்றும் 28—6—1975 இந்திய அரசிதழின் பக்கம் 1363-ல் உள்ள 208(உ)ல் உள்ள எஸ்.ஒ. (S.O.)வைப் பார்க்கவும்.

4. தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்தும் ஒன்றியத்திடம் உற்றமைந்திருக்கும்; மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ''நெடுஞ்சாலைகள்'' என்பது— தேசிய நெடுஞ்சாலைகள் ஒன்றியத்திடம் உற்றமைந்திருத்தல்.

(i) எல்லை வரையறுக்கப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அதனைச் சேர்ந்ததாக இருக்கும் நிலங்கள் அனைத்தையும்,

(ii) அத்தகைய நெடுஞ்சாலைகளின்மேல் அல்லது குறுக்கே கட்டப்பட்ட பாலங்கள், சாலையடி வடிகால்கள், குடைவழிச் சாக்கடைகள், தரைப்பாலங்கள், வண்டிப் பாதைகள் மற்றும் பிற கட்டுமானங்கள் அனைத்தையும்,

(iii) அத்தகைய நெடுஞ்சாலைகளின் வேலிகள், மரங்கள், கம்பங்கள் மற்றும் எல்லை, பர்லாங்கு, மைல் ஆகியவற்றின் கற்கள் அனைத்தையும் அல்லது அத்தகைய நெடுஞ்சாலைகளைச் சேர்ந்துள்ள ஏதேனும் நிலம் எதனையும்,

உள்ளடக்கும்.

5. தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்தின் மேம்பாடு மற்றும் அவற்றை முறையாகச் செப்பனிட்டுப் பேணுவது மைய அரசாங்கத்தின் பொறுப்பாக இருத்தல் வேண்டும்; ஆனால், மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, தேசிய நெடுஞ்சாலை எதனின் மேம்பாடு அல்லது பேணுகை தொடர்பான செயற்பணி எதுவும், அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்கு உட்பட்டு அந்த தேசிய நெடுஞ்சாலை அமைந்திருக்கிற மாநிலத்தின் அரசாங்கத்தால் அல்லது மைய அரசாங்கத்திற்கு அல்லது மாநில அரசாங்கத்திற்குக் கீழமைந்த அலுவலர் எவராலும் அல்லது அதிகாரஅமைப்பு எதனாலும் செலுத்தப்படத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும் என்று பணிக்கலாம். தேசிய நெடுஞ்சாலைகளின் மேம்பாடு மற்றும் பேணுகைக்கான பொறுப்பு.

6. மைய அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை எதனின் வகையங்களில் எதனையும் மாநிலத்தில் நிறைவேற்றுவது குறித்த மாநிலம் எதனின் அரசாங்கத்திற்குப் பணிப்புரைகள் கொடுக்கலாம். பணிப்புரைகளைப் பிறப்பிப்பதற்கு அதிகாரம்.

7. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக தேசிய நெடுஞ்சாலைகள் மேலான தோணித்துறைகள், தற்காலிகப் பாலங்கள், குடைவழிச் சாக்கடைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது தொடர்பாகச் செய்யப்பட்ட பணிகள் அல்லது நன்மைகளுக்காக இதற்கென வகுக்கப்பட்ட விதிகளால் விதிக்கப்படலாகும் வீதங்களில் கட்டணங்களை விதிக்கலாம். தேசிய நெடுஞ்சாலைகள் மேல்செய்யப்பட்ட பணிகள் அல்லது நன்மைகளுக்கான கட்டணங்கள்.

(2) அத்தகைய கட்டணங்கள் அவ்வாறு விதிக்கப்படும்போது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கு இணங்க தண்டல் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலை எதனின் மேலான தோணித்துறைகள், தற்காலிகப் பாலங்கள், குடைவழிச் சாக்கடைகள் ஆகியவற்றின் பயன் தொடர்பாகச் செய்யப்பட்ட பணிகள் அல்லது நன்மைகளுக்காக இந்தச் சட்டத்தின் தொடக்க நிலையை ஒட்டி முன்பு விதிக்கத்தக்கதாக இருந்த கட்டணம் எதுவும், உட்பிரிவு (1)ஆல் வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துகையில், மாற்றுகை செய்யப்பட்டலான்றியும், மாற்றுகை செய்யப்படுகிற வரையிலும், இந்தச் சட்டத்தின்படி தொடர்ந்து விதிக்கப்படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

8. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசாங்கம், மாநிலத்தினுள் அமைந்திருக்கிற தேசிய நெடுஞ்சாலை முழுவதன் அல்லது அதன் ஏதேனும் பகுதி எதனின் மேம்பாடு அல்லது பேணுகை தொடர்பான அல்லது, நேர்வுக்கேற்ப, பிரிவு 2 இன் உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்படும் நகராட்சிப் பகுதியினுள் அமைந்திருக்கிற நெடுஞ்சாலையின் அத்தகைய பகுதி எதனின் மேம்பாடு அல்லது பேணுகை தொடர்பான நகராட்சிப் பகுதி எதனின் கட்டாள்கை அல்லது மேலாண்மை ஒப்படைவு செய்யப்பட்ட மாநிலம் எதனின் அரசாங்கத்துடன் அல்லது அதிகாரஅமைப்பு எதனுடனும் ஓர் உடன்பாடு செய்து கொள்ளலாம்; மற்றும் அத்தகைய உடன்பாடு எதுவும், அதற்குரிய அந்தந்த தரப்பினர்களால் செலவினங்கள் பகிர்ந்துகொள்ளப்படுவதற்கு வகைசெய்யலாம். மாநில அரசாங்கங்களுடன் அல்லது நகராட்சிகளுடன் உடன்பாடுகள்.

விதிகள் வகுக்க அதிகாரம்.

9. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகள் வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகம் இல்லாமலும், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் எதற்காகவும் அத்தகைய விதிகள் வகைசெய்யலாம், அவையாவன :—

(அ) எந்த முறையில் எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, ஒரு தேசிய நெடுஞ்சாலை அல்லது அதன் பகுதி எதனின் மேம்பாடு அல்லது பேணுகை தொடர்பான செயற்பணி எதுவும், மாநில அரசாங்கத்தால் அல்லது மைய அரசாங்கத்திற்கு அல்லது மாநில அரசாங்கத்திற்குக் கீழமைந்த எவரேனும் அலுவலர் எவராலும் அல்லது அதிகாரஅமைப்பு எதனாலும் செலுத்தப்படலாமோ அந்த முறை மற்றும் அந்த வரைக்கட்டுகள் ;

(ஆ) தேசிய நெடுஞ்சாலை எதனின் மேலான தோணித்துறைகள், தற்காலிகப் பாலங்கள், குடைவழிச் சாக்கடைகள் ஆகியவற்றின் பயன்தொடர்பாகச் செய்யப்பட்ட பணிகளுக்கான கட்டணங்கள் எந்த வீதங்களில் விதிக்கப்படலாமோ அந்த வீதங்கள் மற்றும் அத்தகைய கட்டணங்கள் தண்டல் செய்யப்பட வேண்டிய முறை;

(இ) தேசிய நெடுஞ்சாலைகளைக் காலமுறையில் ஆய்வுசெய்தல் மற்றும் மைய அரசாங்கத்திற்கு அந்த ஆய்வு அறிக்கைகளைப் பணிந்தனுப்புதல் ;

(ஈ) தேசிய நெடுஞ்சாலைகளின்மேல் நிறைவேற்றப்பட்ட வேலைகள் பற்றிய அறிக்கைகள் ;

(உ) இந்தச் சட்டத்தின்படி வகைசெய்யப்படவேண்டிய பிற பொருட்பாடு எதுவும்.

நாடாளுமன்றத்தின் முன்பு அறிவிக்கைகள், விதிகள் முதலியவற்றை வைத்தல்.

10. இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அல்லது செய்து கொள்ளப்பட்ட உடன்பாடுகள் அனைத்தும், அவை பிறப்பிக்கப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும் ; மற்றும் பிரிவு 9இன்படி வகுக்கப்பட்ட விதிகள் அனைத்தும், அவை வகுக்கப்பட்டபின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன்பும், முப்பது நாட்களுக்குக் குறையாமல் வைக்கப்படுதல் வேண்டும் ; மேலும், அவை, அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடரின்போது அல்லது அதை ஒட்டிப் பின்வரும் கூட்டத்தொடரின்போது நாடாளுமன்றம் செய்யலாகும் மாற்றமைவுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

## இணைப்புப்பட்டியல்

(பிரிவு 2-ஐப் பார்க்கவும்)

## தேசிய நெடுஞ்சாலைகள்

| வரிசை எண். (1) | தேசிய நெடுஞ்சாலை எண். (2) | தேசிய நெடுஞ்சாலைகளின் விவரிப்பு. (3) |
|---|---|---|
| 1 | 1 | தில்லி, அம்பாலா, ஜலந்தர், அமிர்தசரஸ் ஆகியவற்றை இணைக்கின்ற இந்தியா, பாக்கிஸ்தான் ஆகியவற்றுக்கிடையேயான எல்லையை நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை. |
| 2 | 1 (அ) | ஜலந்தர், மதப்பூர், ஜம்மு, பணிகால், ஸ்ரீநகர், பரமுலா, ஊரீ ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 3 | 2 | தில்லி, மதுரா, ஆக்ரா, கான்பூர், அலகாபாத், காசி, மோகானியா, பாலி, கல்கத்தா ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 4 | 3 | ஆக்ரா, குவாலியர், சிவபுரி, இந்தூர், துலியா, நாசிக், தாணா, பம்பாய் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 5 | 4 | வரிசை எண் 4இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் தாணாவிற்கு அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற பூனா, பெல்காம், ஹூப்ளி, பெங்களூர், இராணிப்பேட்டை, சென்னை ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 6 | 5 | வரிசை எண் 7இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் பகரகோராவிற்கு அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற, கட்டாக், புவனேஸ்வரம், விசாகப்பட்டினம், விஜயவாடா, சென்னை ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 7 | 6 | வரிசை எண் 4இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் துலியாவிற்கு அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற மற்றும் நாக்பூர், ராஜ்பூர், சம்பல்பூர், பகரகோரா, கல்கத்தா ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 8 | 7 | வரிசை எண் 3இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் துலியாவிற்கு அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற மன்காவன், ரிவா, ஜபல்பூர், லக்னாதன், நாக்பூர், ஹைதராபாத், கர்நூல், பெங்களூர், கிருஷ்ணகிரி, சேலம், திண்டுக்கல், மதுரை, கன்னியாகுமரி ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| [1][8 (அ) | 7 (அ) | எண் 7 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பாளையங்கோட்டையை தூத்துக்குடி துறைமுகத்துடன் இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 9 | 8 | தில்லி, ஜெய்பூர், கஜ்மீர், உதய்பூர், அகமதாபாத், பரோடா, பம்பாய் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 10 | 8 (அ)[2] | அகமதாபாத், லிம்பிடி, மார்வி, கண்ட்லா ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 11 | 8(ஆ) | வரிசை எண் 10இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன், பாமென்பூர் அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற ராஜ்கோட், போர்பந்தர் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| [3][11(அ) | 8 (இ) | குஜராத்தில் எண் 8 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள சிலோடாவுடன் காந்திநகரை இணைக்கும், எண் 8 (அ) என்ற தேசிய நெடுஞ்சாலை மீது சர்கஜியில் முடிவடையும் நெடுஞ்சாலை. |

1. எண் 179 (உ) என்ற எஸ்.ஓ. (S.O.)-வினால் புகுத்தப்பட்டது. 8–3–1972 இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 3 (ii), பக்கம் 343.

2/4 மைலிலிருந்து 3/6.5 மைல் வரையிலான இந்த நெடுஞ்சாலையின் ஒரு பகுதி இப்போது விட்டுவிடப்பட்டது. 5—2—1963ஆம் ஆண்டு இந்திய அரசிதழ் பகுதி II, பிரிவு 3 (ii), பக்கம் 622இல் உள்ள எண் 512 என்ற எஸ்.ஓ. (S.O,)வைப் பார்க்கவும்.

3 எண் 3114 என்ற எஸ்.ஓ. (S.O.)-வினால் புகுத்தப்பட்டது. 28–10–1978 இந்திய அரசிதழ் பகுதி II. பிரிவு 3 (ii), பக்கம் 3018.

இணைப்புப்பட்டியல்—தொடர்ச்சி

(பிரிவு 2-ஐப் பார்க்கவும்)

தேசிய நெடுஞ்சாலைகள்—தொடர்ச்சி

| வரிசை எண். | தேசிய நெடுஞ்சாலை எண். | தேசிய நெடுஞ்சாலைகளின் விவரிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 12 | 9 | பூனா, கோலாபூர், ஹைதராபாத், விஜயவாடா ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 13 | 10 | தில்லி, பஜீல்கா ஆகியவற்றை இணைக்கும், இந்தியா, பாக்கிஸ்தான் ஆகியவற்றுக்கு இடையிலான எல்லையை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை. |
| [1][13 ⓤ | 15 | (கண்ட்லா அருகில்) சுமக்கியாலி அருகில் எண் 8(அ) என்ற தேசிய நெடுஞ்சாலையுடன் அதனுடைய சந்திப்பை பதன்கோட், அமிர்த்தசரஸ், பாட்டிண்டா, கங்காநகர், பிக்கானீர், ஜெய் சால்மா, பார்மா ஆகியவற்றுடன் இணைக்கும் நெடுஞ்சாலை.] |
| 13(எ) | 17(அ) | எண் 17 என்ற தேசிய நெடுஞ்சாலையுடன் கோர்டாவிம் அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற மர்மகோவா துறைமுகத்தில் முடிவடையும் நெடுஞ்சாலை. |
| 14 | 22 | அம்பாலா, கால்கா, சிம்லா, நர்கண்டா, ராம்பூர், சின்னி ஆகியவற்றை இணைக்கும் இந்தியா திபெத் ஆகியவற்றுக்கு இடையிலான எல்லையிலுள்ள சிப்தீலா அருகில் செல்லும் நெடுஞ்சாலை. |
| [2][14(அ) | 23 | சான், ராஞ்சி, ரூர்கேலா, தால்சர்யை இணைக்கும், எண். 42 என்ற தேசிய நெடுஞ்சாலையுடன் முடிவடையும் நெடுஞ்சாலை.] |
| 15 | 24 | தில்லி, பரேலி, லக்னௌ ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 16 | 25 | லக்னௌ, கான்பூர், ஜான்சி, சிவபுரி ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 17 | 26 | ஜான்சி, லக்னதான் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 18 | 27 | மங்காளன் அருகில் வரிசை எண் 8இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் அலகாபாத்தை இணைக்கும் நெடுங்சாலை. |
| 19 | 28 | வரிசை எண் 23இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் பரணிக்கு அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற முசாபர்பூர், பிப்ரா, கோரப்பூர், லக்னௌ ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 20 | 28(அ) | வரிசை எண் 19இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் பிப்ரா அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற சாகுளி, ராக்ஸ்ரூல் ஆகியவற்றை இணைக்கும், மற்றும் இந்தியா, நேப்பாளம் ஆகியவற்றுக்கு இடையிலான எல்லையை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை. |
| 21 | 29 | கோரக்பூர், காஸிப்பூர், பனாரஸ் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |

1. எண் 179(உ) என்ற எஸ்.ஓ. (S.O.)—வினால் புகுத்தப்பட்டது. 8–3–1972 இந்திய அரசிதழின் சிறப் பிதழ், பகுதி II பிரிவு 3 (ii), பக்கம் 443.

2. எண் 179(உ) என்ற எஸ்.ஓ. (S.O.)—வினால் புகுத்தப்பட்டது. 8–3–1972 இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி I. பிரிவு 3 (ii) பக்கம் 443.

இணைப்புப்பட்டியல்—தொடர்ச்சி

(பிரிவு 2-ஐப் பார்க்கவும்)

தேசிய நெடுஞ்சாலைகள்—தொடர்ச்சி

| வரிசை எண். (1) | தேசிய நெடுஞ்சாலை எண். (2) | தேசிய நெடுஞ்சாலைகளின் விவரிப்பு. (3) |
|---|---|---|
| 22 | 30 | வரிசை எண் 3இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் மோகனியா அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற பாட்னா மற்றும் பக்தியார்பூர் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 23 | 31 | பக்தியார்பூர், மோஹமேக், பூர்னியா, டால்கோவா, சில்குரி, சிவோக், கூட்பேகர் ஆகியவற்றை இணைக்கும், கோல்பாரா அருகில் வரிசை எண் 28இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் அதனுடைய சந்திப்பை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை. |
| 24 | 31 (அ) | சிவோக், கண்டோக் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| [1][24 (அ) | 32 | எண் 2 என்ற தேசிய நெடுஞ்சாலையுடன் கோவித்பர் அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற ஜாம்ஜெட்பூருடன் தன்பாதை இணைக்கும் நெடுஞ்சாலை.] |
| 24(அ)(அ) | | * * * * |
| [2][24 (அ)(அ)(அ) | 31 (இ) | கால்காலியா அருகிலிருந்து தொடங்கும், பாக்தோகரா, சால்ஜா, நாகாகாட்டா, ஜெயர்காட்டா ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை.] |
| 25 | 33 | வரிசை எண் 3இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் பார்ஹி அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற மற்றும் ராஞ்சி டாட்டாநகர் ஆகியவற்றை இணைக்கும் மற்றும் பகரக்கோரர் அருகில் வரிசைஎண் 7இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் தன்னுடைய சந்திப்பை நோக்கி செல்லும் நெடுஞ்சாலை. |
| 26 | 34 | வரிசை எண் 23இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சால்யுடன் டல்ஹோடா அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்துதொடங்குகிற மற்றும் பெர்ஹாம்பூர், பாராசட், கல்கத்தா ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 27 | 35 | பாராசட், பன்பான் ஆகியவற்றை இணைக்கும் இந்தியா, பாக்கிஸ்தான் ஆகியவற்றுக்கு இடையிலான எல்லையை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை. |
| 28 | 37 | வரிசை எண் 23இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் கோல்பாரா அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற கௌஹாத்தி, ஜோராபட், காமர்கான், மக்கும், சைகோ ஜாட் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 29 | 38 | மக்கும், லிடோ, லெக்காபணி ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 30 | 39 | காமர்கான், அம்பால், பட்டில் ஆகியவற்றை இணைக்கும் இந்தியா, பர்மா ஆகியவற்றுக்கு இடையிலான எல்லையை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை. |

1. 1958 இந்திய அரசிதழின் பகுதி II' பிரிவு 3 (ii), பக்கம் 382 இல் வெளியிடப்பட்ட 568 ஆம் எண்ணுள்ள எஸ்.ஓ. (S.O.)—வினால் புகுத்தப்பட்டது.

2. எண் 698 என்ற எஸ்.ஓ. (S.O.)—வினால் புகுத்தப்பட்டது. 1–9–1980 இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii), பக்கம் 1296.

(பிரிவு 2 ஐப் பார்க்கவும்)

தேசிய நெடுஞ்சாலைகள்—தொடர்ச்சி

| வரிசை எண். | தேசிய நெடுஞ்சாலை எண். | தேசிய நெடுஞ்சாலைகளின் விவரிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 31 | 40 | ஜராபட், சில்லாங் ஆகியவற்றை இணைக்கும் தாங்கி அருகில் இந்தியா, பாக்கிஸ்தான் ஆகியவற்றுக்கு இடையிலான எல்லையை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை. |
| 32 | 42 | வரிசை எண் 7இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் சம்பல்பூர் அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்குகிற மற்றும் கட்டாக் அருகில் வரிசை எண் 6இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் அதனுடைய சந்திப்பு அங்கூல்வழியாக நோக்கி செல்லும் நெடுஞ்சாலை. |
| 33 | 43 | ரெய்பர், விஜயநகரம் ஆகியவற்றை இணைக்கும், மற்றும் விஜயநகரம் அருகில் வரிசை எண் 6ல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் அதனுடைய சந்திப்பை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை. |
| 34 | 45 | சென்னை, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 35 | 46 | கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 36 | 47 | சேலம், கோயம்புத்தூர், திருச்சூர், எர்ணாகுளம், திருவனந்தபுரம் கன்னியாகுமரி ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| [1][36 ⓐ | 41 | எண் 6 என்ற தேசிய நெடுஞ்சாலை கோலகோட் அருகில், அதனுடைய சந்திப்பிற்கும், ஹாவிடாதுறைமுகத்தைத் தொடுகிற விடத்து, அந்த முனைக்கும் இடையேயான நெடுஞ்சாலை.] |
| | | [2][ * * * *] |
| [3][37 ⓘ | 48 | பெங்களூர், ஹசன், மங்களூர் ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை.] |
| 38 | 49 | மதுரை, தனுஷ்கோடி ஆகியவற்றை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| 39 | 50 | பூனாவிற்கு அருகில் வரிசை எண் 5இல் குறித்துரைக்கப்பட்ட நெடுஞ்சாலையுடன் நாசிக்கை இணைக்கும் நெடுஞ்சாலை. |
| [4][40 | 51 | அசாமில் எண் 37 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பைகாவில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்கி, தராவை இணைத்து, மற்றும் மேஹாலயாவில் தானுவில் முடிவடையும் நெடுஞ்சாலை.] |

1. 1968 இந்திய அரசிதழின் பகுதி II, பிரிவு 3 (ii), பக்கம் 41 இல் வெளியிடப்பட்ட எண் 39 என் எஸ்.ஓ. (SO)—வினால் புகுத்தப்பட்டது.

2. எண் 168 என்ற எஸ்.ஓ. (SO)—வினால் புகுத்தப்பட்டது. 7–3–1972 இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 3 (ii), பக்கம் 431.

3. எண் 179 என்ற எஸ்.ஓ. (SO)—வினால் புகுத்தப்பட்டது. 8–3–1972 இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 3 (ii), பக்கம் 443.

4. எண் 698 என்ற எஸ்.ஓ. (SO)—வினால் புகுத்தப்பட்டது. 1–8–1980 இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii), பக்கம் 1296.

இணைப்புப்பட்டியல்—தொடர்ச்சி

(பிரிவு 2ஐப் பார்க்கவும்)

தேசிய நெடுஞ்சாலைகள்—தொடர்ச்சி

| வரிசை எண். (1) | தேசிய நெடுஞ்சாலை எண். (2) | தேசிய நெடுஞ்சாலைகளின் விவரிப்பு. (3) |
|---|---|---|
| 41 | 52 | அசாமில் எண் 31 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பைஹாட்டர் சார்லியில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்கி, தஜ்பூர், பண்டர்தேவா, வடக்கு லக்ஷ்மிபூர், பைஸ்காட், டிசு, சிட்டாபணி ஆகியவற்றை இணைத்து எண் 37 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள சைகாகோட் அருகில் முடிவடையும் நெடுஞ்சாலை. |
| 42 | 52(அ) | அசாமில் எண் 52 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பண்டர் தேவாவில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்கி, மற்றும் அருணாசலப் பிரதேசத்தில் கனகாரில் முடிவடையும் நெடுஞ்சாலை. |
| 43 | 53 | அசாமில் எண் 44 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பதர்பூர் அருகில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்கி, சில்கார், சிரிகாட் ஆகியவற்றை இணைத்து, எண் 39 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள மேல் அம்பால் அருகில் முடிவடையும் நெடுஞ்சாலை. |
| 44 | 54 | எண் 53 என்ற தேசிய நெடுஞ்சாலையிலுள்ள அசாமில் சில்காரில் அதனுடைய சந்திப்பிலிருந்து தொடங்கி, அசனாவைஇணைத்து மற்றும் மிசோராமில் லுங்கிலில் முடிவடையும் நெடுஞ்சாலை. |